End Time Warriors

# பரலோக வாசல்

A monthly prayer bulletin for YOUTH & TEENS

Battle 01 - Field 12 - April 2023

## இழந்துவிடாதே



# முதல் வரிகள்...

**கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.**

இந்த வருடத்தின் துவக்கத்தில் தேவன் நமக்கு வாக்குரைத்தபடி, ஊழியப்பாதையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும், அவருக்குள் வேர் பற்றவும், அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கவும் தேவன் கிருபை செய்தார். இந்தலெந்து நாட்களிலும், அநேக திருச்சபைகளுக்குக் கடந்து சென்று, தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள தேவன் தயவு பாராட்டினார். அநேக திருச்சபை மக்கள் மற்றும் வாலிபர்கள் கர்த்தருடைய வார்த்தையை மிகவும் ஆர்வமாய் கேட்டதுமல்லாமல், தங்கள் வாழ்க்கையை மறுபடியும் தேவனுக்கு அர்ப்பணித்தார்கள். குறிப்பாக, தேசத்திற்காக தங்களுடைய சபைக்காக திறப்பிலே நிற்கிற அநேக தேவ பிள்ளைகளையும், ஜெபக்குழுக்களையும் திருச்ச்சபைகளுக்குள்ளாக தேவன் எழுப்பியிருக்கிறதை என்னால் பார்க்க முடிந்தது. இது, நம் தேசத்தில் வரப்போகும் எழுப்புதலுக்கான ஒரு முன்னோட்டம் என்பதை, என்னுடைய ஆவியில் உணர முடிந்தது.

நீங்கள் ஏறெடுக்கிற ஒவ்வொரு ஜெபத்திற்கும் பதில் உண்டு என்பதை ஒருநாளும் மறந்து போகாதீர்கள். குறிப்பாக, உங்கள் ஜெபத்தின் விளைவாக, நம்முடைய தேசத்தில் ஜெபிக்கிற ஒரு சேனையை கர்த்தர் எழுப்பிக் கொண்டிருக்கிறார். மேலும், இந்த ஏப்ரல் மாதத்திலும் 3 ஆம் ஞாயிறு (April 16th) சென்னை பட்டணத்தில், குரோம்பேட்டையில் வைத்து, மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகையை ஒழுங்கு செய்திருக்கிறோம். தவறாமல் கலந்து கொள்ளுங்கள். அதே போல, இந்த மாதத்தின் 5 ஆம் ஞாயிறு (April 30th) கோயம்புத்தூர் பட்டணத்தில் வைத்து, மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகையை புதிதாக துவங்க இருக்கிறோம். எனவே, இந்த பட்டணங்களில், நீங்கள் இருப்பீர்களென்றால், எங்களோடு கூட நீங்கள் இணைந்து கொள்ளலாம். இது வாலிபர்களுக்கென்று, ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகை. மேலும், உங்கள் நண்பர்களுக்கும் இந்த கூடுகையை குறித்து அறிமுகம் செய்யுங்கள். நாம் இணைந்து, தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த அது ஏதுவாக இருக்கும். கடைசியாக,உங்கள் ஜெபங்களில் எங்களை அதிகமாக நினைத்துக் கொள்ளுங்கள்.

**தேவ கிருபை உங்களோடிருப்பதாக...**

END TIME WARRIORS
PRAY & WAR

**யுத்த களத்தில் உங்களோடு,**

R. **சாலமோன்.**




கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். ஒவ்வொரு மாதத்திலும், ஒரு கருப்பொருளை மையமாகக் கொண்டு, ஒவ்வொரு பகுதியிலும் தேவன் நம்மோடு கூட இடைபடுவார். இந்த மாதத்திலும் 'இழந்து விடாதே' என்ற கருப்பொருளின் கீழ் தேவன் நம்மோடு கூட பேச விரும்புகிறார். இந்த கருப்பொருளை கேட்ட மாத்திரத்தில், ஒரு சிலருக்கு ஒருவித பயமும், சிலருக்கு நாம் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற ஒரு உணர்வு உண்டாகலாம். 2யோவான் 1:8-ல் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது, "**உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்**". கர்த்தர் உங்களுக்கு வைத்திருக்கிற பூரண பலனை நீங்கள் பெறாதபடிக்கும், அவர் உங்களுக்கு கொடுத்த ஸ்தானத்தை நீங்கள் இழந்து போகும்படிக்கும், பிசாசானவன் அனுதினமும் உங்களோடு போராடி கொண்டிருக்கிறான்.

தேவன் ஒரு மனிதனை தெரிந்து கொள்ளும்போது, ஒருநாளும் அவனை இழப்பதற்காக தெரிந்து கொள்ளுவதில்லை, மாறாக அவன் மேல் ஒரு பெரிய திட்டத்தை வைத்து அவனை அழைக்கிறார். 1சாமு.9:21-ல் தேவன் ஒரு மனிதனை தெரிந்து கொள்ளுகிறார். அவன் நினைத்துக் கூட பார்க்கமுடியாத ஸ்தானத்திலே அவனை அமர்ந்திருக்க பண்ணுகிறார்.

1சாமு.10:8-ல் சொல்லப்படுகிறது, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியதபடிக்கு, ஆசாரியர்கள் மாத்திரம் செலுத்த வேண்டிய பலியை, துணிகரமாய் சவுல் செலுத்துகிறார். இந்த ஒரு காரியம் சவுலினுடைய பார்வைக்கு சரியாய் தெரிந்தது. ஆனால், கர்த்தருடைய பார்வைக்கு அது பொல்லாப்பாயிருந்தது.

அநேக நேரங்களில், நம்முடைய வாழ்க்கையில் நமக்கு சரியாய் தோன்றுகிற அநேக காரியங்கள், தேவனுடைய சித்தமாய் இருப்பதில்லை. மாத்திரமல்ல, அவருக்கு சித்தமில்லாத காரியங்களை விட்டு விலகுமாறு, அநேக தருணங்களும் நமக்கு கொடுக்கப்படுகிறது. ஆனால், நம்முடைய பார்வைக்கு நலமாய் தோன்றுகிற காரியங்களை விட்டு விலகுவதற்கு நாம் சிரமப்படுகிறோம், அதை நியாயப்படுத்தவும் முயற்சிக்கிறோம். 1சாமு.18:9-ல் சொல்லப்படுகிறது, முழு தேசமே பயந்து நடுங்கிக் கொண்டிருந்த பெலிஸ்தனாகிய கோலியாத்தை, தனி மனிதனாய் நின்று தாவீது ஜெயிக்கிறார். இந்த தாவீதை உற்சாகப்படுத்த வேண்டிய சவுல், தனக்குள்ளே பொறாமை கொண்டவராய் தாவீதை கொலை செய்ய வகை தேடுகிறார். இதனுடைய அடுத்த கட்ட நகர்வாக, 1சாமு.22:18-ல் தேவனுடைய ஆசாரியர்கள் 85 பேரை கொலை செய்கிறார். 1சாமு.28:8-ல் குறி சொல்லுகிறவர்களை தேடி செல்லுகிறார். கடைசியாக, 1சாமு.31:6-ல் சவுலும் அவனுடைய குமாரரும் ஒருமித்து மரித்து போனார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவன் அவரை தெரிந்து கொள்ளும் போது பல கனவுகளோடு, திட்டங்களோடு கூட அவரை தெரிந்தெடுத்திருப்பார். ஆனால், இப்படி தன்னை சரி செய்ய தவறிய சவுல், அவருடைய தவறான தெரிந்தெடுத்தலால், ஒரு கொடூரமான முடிவுக்கு நேரே போய் நின்றார்.

இதை வாசித்து கொண்டிருக்கிற அன்பு தம்பி, தங்கச்சி, தேவன் உன் மேல் பெரிய திட்டத்தை வைத்திருக்கிறார். நீ அதை பெற்றுக்கொள்ள முடியாதபடி, உன் பார்வைக்கு சரியாய் தோன்றுகிற சில காரியங்களை, நீ விடாதபடி பிடித்துக்கொண்டு, தேவன் உனக்கு வைத்திருக்கிறதை நீ இழந்து போய் விடாதே. அவரால் அருளப்படுகிறதை நீ இழந்து போகக்கூடாது என்பது தான் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அதினாலே, இன்றைக்கும் இந்த பத்திரிக்கையை உன் கையில் கொண்டு வந்து, அதை உன்னை வாசிக்க வைத்துக் கொண்டிருக்கிறார். தேவனுடைய கிருபையின் கரம் உன்னை நோக்கி இன்றைக்கு நீட்டப்படுகிறது. அவருடைய கரத்தில் உன்னை முழுமையாய் அர்ப்பணிப்பாயா.

***அன்பின் பிதாவே, உம்மால் அருளப்படுகிறதை, பெற்றுக்கொள்ள முடியாதபடி, அதை நான் இழந்து போவதற்கு, என்னை தடை செய்கிற, பிசாசினுடைய ஒவ்வொரு தந்திரங்களையும், இனிவரும் காலங்களில் நான் மேற்கொண்டு, உம்முடைய சித்தத்தைசெய்ய எனக்கு கிருபை செய்தருளும். இயேசுவின் மூலம் ஜெபிக்கிறோம் பிதாவே ஆமென்.***

# ஜெபியுங்கள்



## 1ம் வார ஜெபக்குறிப்புகள்...

* கிறிஸ்தவ வாலிபர்கள் அறிய வேண்டிய பிரகாரமாய் ஆண்டவரை அறிந்துகொள்ள ஜெபிப்போம்.
* அனுதினமும் நம் தேசத்தில் பல்லாயிரக்கணக்கானோர் விபத்துகளில் மரிக்கின்றனர். இப்படிப்பட்ட விபத்துகளும், மரணங்களும் குறைய ஜெபிப்போம்.
* தேசத்தை ஆளுகிற தலைவர்களுக்காய் ஜெபிப்போம். சுயநலனை வெறுத்து, மக்கள் நலனை மனதில்கொண்டு செயலாற்ற ஜெபிப்போம்.
* நம் மாநிலத்தில் பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்பட ஜெபிப்போம்.



## 2ம் வார ஜெபக்குறிப்புகள்...

* திரைப்படங்களுக்கு அடிமையாகி உள்ள நம் வாலிபர்கள் மீட்கப்படும்படியாய் கல்வாரி சிலுவையில் மரித்து, உயிர்த்த இயேசு இவர்களுக்கு சீக்கிரமாய் அறிவிக்கப்படும்படியாய் ஜெபிப்போம்.
* இன்றைக்கு நம்முடைய வாலிபர்களுக்குள்ளாக காணப்படுகிற ஜாதி உணர்வுகள் நீங்கவும், கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து கொள்ளவும் ஜெபிப்போம்.
* வருகிற 2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கிற பாராளுமன்ற தேர்தலுக்காய் ஜெபிப்போம் கர்த்தருக்கு பயப்படுகிற தேவ மனிதர்கள் ஆட்சிபீடத்தில் அமரும்படியாய் ஜெபிப்போம்.
* தேவ ஊழியர்களின் ஜீவனுக்கு விரோதமாய் போராடுகிற கிரியைகள் கட்டப்படவும், ஒரு தெய்வீக பாதுகாவலை கர்த்தர் அருளும்படியாய் ஜெபிப்போம்.

## 3ம் வார ஜெபக்குறிப்புகள்...

* ஜெபிக்கக்கூடிய ஒரு வாலிப ஜெப சேனை இந்த நாட்களில் எழும்ப ஜெபிப்போம்
* சபைகளுக்குள் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.
* கள்ள ஊழியர்கள், கள்ள தீர்க்கத்ரிசிகளின் வார்த்தையினால் ஜனங்கள் வஞ்சிக்கப்படாதபடி, அவர்களை இனம்கண்டுகொள்ளக்கூடிய ஆவிக்குரிய தெளிவு விசுவாசிகளுக்கு உண்டாக ஜெபிப்போம்.
* மூட பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டுள்ள நம் ஜனங்களின் கண்கள் திறக்கப்பட, அடிமைத்தனங்களில் இருந்து வெளிவர ஜெபிப்போம்.

## 4ம் வார ஜெபக்குறிப்புகள்...

* பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குற்றங்களில் ஈடுபடுவோர் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
* ஆபாச வலைத்தளங்களை பயம்படுத்துவோர் அந்த அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட ஜெபிப்போம்.
* பண ஆசையினால் தவறான பாதைகளை தேர்வு செய்யும் வாலிபர்கள் சரியான பாதைக்கு திருப்பப்பட ஜெபிப்போம்.
* தீவிரவாத இயக்கங்கள், அதன் தலைவர்கள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.



## 5ம் வார ஜெபக்குறிப்புகள்...

* ஜெபிக்கக்கூடிய ஒரு வாலிப ஜெப சேனை இந்த நாட்களில் எழும்ப ஜெபிப்போம்.
* சபைகளுக்குள் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாக ஜெபிப்போம்.
* கள்ள ஊழியர்கள், கள்ள தீர்க்கத்ரிசிகளின் வார்த்தையினால் ஜனங்கள் வஞ்சிக்கப்படாதபடி, அவர்களை இனம்கண்டுகொள்ளக்கூடிய ஆவிக்குரிய தெளிவு விசுவாசிகளுக்கு உண்டாக ஜெபிப்போம்.
* மூட பழக்கவழக்கங்களுக்கு அடிமைப்பட்டுள்ள நம் ஜனங்களின் கண்கள் திறக்கப்பட, அடிமைத்தனங்களில் இருந்து வெளிவர ஜெபிப்போம்.



இருளின் ராஜ்யத்திற்கும் ஒளியின் ராஜ்யத்திற்கும் இடையே ஓய்வின்றி இடைவிடாமல் நடந்துக் கொண்டிருக்கிற ஆவிக்குரிய யுத்தத்தில் ஒளியின் ராஜ்யத்தில் இணைந்து, சாத்தானால் சீரழிந்துக் கொண்டிருக்கும் கோடிக்கணக்கான ஆத்துமாக்களை அழிவிலிருந்து மீட்டெடுக்கப் போராடும் ஒவ்வொரு போர்ச்சேவர்களுக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

# True Soldier



ஒவ்வொரு மாதமும் கர்த்தர் நம்மை ஒரு உண்மை போர்ச்சேவகர்களாக உருவாக்கி வருகிறார். இப்பொழுதும் நாம் கற்றுக்கொள்ள போகும் ஒரு போர்ச்சேவகனுக்குரிய ஆயத்தம். **"The True Soldier should spend his time with Commander"** "ஒரு போர்ச்சேவகன் தன்னுடைய நேரத்தை தன் தளபதியுடன் செலவிடுபவனாக இருக்க வேண்டும்" தேவனுடைய படையில் யுத்த வீரர்களாக யுத்தம் புரியும் நமக்கோ இயேசுகிறிஸ்துவே யுத்த தளபதியாக இருக்கிறார். ஒரு போர்ச்சேவகன் தான் எப்பொழுதும் போர் முனையில் நிற்கக் கூடியவன் என்பதையும், தன்னை அழைத்தவர் இன்னார் என்பதையும், அவருடைய ராஜ்யம் எப்படிப்பட்டது? அவருடைய வல்லமை, மகத்துவம் எப்படிப்பட்டது என்பவைகளைப் பற்றிய ஆவிக்குரிய தெளிவைப் பெற்றவனாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் ஜெயத்தை சுதந்தரிக்க முடியும். இப்படியாக ஒரு ஆங்கிலக் கூற்று **Don Miller** என்பவரால் சொல்லப்பட்டது. **"The True Prayer Warrior sepnds more time with his commander and less time in the battle".** ஒரு யுத்த வீரன் யுத்த யுக்திகளை அறிந்து கொள்வதை விட தன் தளபதியாம் இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் அமர்ந்து நல்ல பங்கைத் தெரிந்து கொள்வதே மிகச் சிறந்தது. மரியாள் தெரிந்து கொண்டதைப் போல நல்ல பங்கை நாமும் தெரிந்து கொள்ள வேண்டும். அநேக பாடு நிறைந்த சூழ்நிலைகள், கவலைகள் மத்தியில் தான் நாம் தேவனை தேடுவதற்கு அவர் சமூகத்திற்குக் செல்கிறோம். ஆனால், ஒரு போர்ச்சேவகன் தேவ சமூகத்தில், அவருடைய பிரசன்னத்தில் எப்போதும் காத்திருந்து ஜெபத்தின் மூலமாக தன்னுடைய தலைமையான யுத்த தளபதியாகிய கர்த்தரோடு நெருங்கிய தொடர்பிலிருப்பது அவசியமாக இருக்கிறது.

அப்பொழுதுதான் அவரிடமிருந்து உதவிகள், ஆலோசனைகள், யுத்த யுக்திகள் போன்றவைகளை பெற்றுக்கொள்ள முடியும். நம்முடைய இடுக்கணில், ஆபத்தில் கர்த்தரை நோக்கி எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் அவருடைய பாதத்தில் தான் அறிந்து கொள்ள முடியும். தாவீது ராஜா, "நான் பெலிஸ்தருக்கு விரோதமாக போகலாமா? அவர்களை என் கையில் ஒப்புக்கொடுப்பீரா?" என்று கேட்டபொழுது "நீ போ, நான் அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்" என்று சொல்லி அவர்களை முறியடிக்க யுத்த ஆலோசனைகளும் வழங்குகிறார். (2சாமு.5:19-25). எதிரேயிருந்து அவர்கள்மேல் பாய்ந்து, முசுக்கட்டை செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது சீக்கிரமாய் எழும்பிப் போ. அப்பொழுது அவர்களை அழிக்க நான் உங்களுக்கு முன்பாக புறப்பட்டிருப்பேன் என்றார். சொல்லப்பட்டபடியே எதிரிகள் முறிந்தோடிப் போனார்கள். கர்த்தரிடத்தில் கேட்டு விசாரித்துச் செல்லும்போது ஆலோசனைகள், யுத்த யுக்திகளைப் பெற்று கொள்கிறோம். அவரே அவருடைய மகத்துவமுள்ள வல்லமையால் எதிரிகளை முறியடிக்கிறார்.

யோசபாத்திற்கு விரோதமாக ஒரு கூட்டமாக மோவாப் புத்திரர், அம்மோன் புத்திரர் எழும்பி யுத்தம் பண்ண வரும்போது, "யுத்தம் உங்களுடையதல்ல, யுத்தம் தேவனுடையது" என்று தீர்க்கதரிசனமாக உரைத்து, அந்த எதிராளிகள் வரும் வழியையும் அவர்கள் சந்திக்கும் இடத்தை முன்னறிவித்து, பின்னர் அந்த யுத்த புருஷர்களுக்கு முன்பாக பாடகர்களை நிறுத்தினான். அவர்கள் அவருடைய மகத்துவத்தைப் பாடி துதித்த போது எதிரிகள் தங்களுக்குள்ளே வெட்டுண்டு மடிந்து விழும்படி செய்தார்.

### யாருக்கு வெளிப்படுத்தப்படும்?

*நல்ல பங்கை கண்டுபிடிக்கிறவர்களுக்கு,*
*அவருடைய பாதத்தைத் தெரிந்துகொள்பவர்களுக்கு*
*அவரிடம் உள்ள ஐக்கியம் இன்னும் வலிமையாக இருக்கும் போது காரியம் வெளிப்படுத்தப்படும். ஜெயத்தைத் தருவார்.*
*யுத்த களத்தில் நிற்பதை விட ஜெபம் என்னும் யுத்த களத்தில் நின்றுவிடு. கர்த்தர் பாதத்தை தெரிந்தெடு...*
*சாத்தானை ஜெயித்திடுவாய்*

**- Daisy Solomon**



**"அன்றியும், அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால் அவர்களும் ஒட்டவைக்கப்படுவார்கள்; அவர்களை மறுபடியும் ஒட்டவைக்கிறதற்கு தேவன் வல்லவராயிருக்கிறாரே."**

**ரோமர் 11:23**

சர்வ வல்லமை உள்ள தேவனின் இரட்சிப்பின் மகத்துவத்தை ஏசாயா தீர்க்கன் விவரிக்கும் விதமாவது: "இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசாயா 59: 12)." நாம் நிற்பது நம் பெலனல்ல என்பதை புரிந்து யாரையும் விட நாம் நல்லவர்கள் அல்ல என்பதையும் உணர்ந்து பரிசுத்தத்தை உறுதியாக பற்றிக்கொள்ளுவோம். நம்முடைய அன்பின் தெய்வம் இயேசுவும் இதை பின்வரும் சம்பவத்தின் மூலம் விளக்கிக்கூறினார். லூக்கா 13:45, "சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே; எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்றார்." நாம் மற்றவர்களுடன் நம்மை ஒப்பிட்டு, அவர்களை விட நாங்கள் சிறந்தவர்கள் அல்லது புனிதர்கள் அல்லது அதிக நீதிமான்கள் என்று நினைக்கிறோம். ஆனால் கடவுளின் தரத்தின்படி, நாம் அனைவரும் குறைந்துவிடுகிறோம், அவருடைய தரத்தை யாராலும் பொருத்திப் பார்க்க முடியாது, ஏனென்றால் அவருடைய தரநிலை பூரண பரிசுத்தம்! (100%). நம்மைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்வது நமது வல்லமையோ பரிசுத்தமோ அல்ல; ஆனால், நாம் இயேசுவை விசுவாசித்து மீண்டும்பிறந்த அனுபவத்தில் கிறிஸ்தவ வாழ்க்கையை நடத்தும்போது அது சாத்தியமாகும். பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படும் வாழ்க்கையே காரியம்.இதை தீத்து 3:35 அழகாக வருணிக்கிறது. "ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்." விசுவாச ஓட்டத்தில் இலக்கை நோக்கி தொடரும் நாம் பாவ இச்சையினால் இழுப்புண்டு வழிவிலகிப்போக வாய்ப்புண்டு. அவ்வாறு தடம் மாறும் ஆத்துமாக்களைக் குறித்து குறை சொல்வதை விட்டுவிட்டு அவர்களுக்கு புத்திசொல்லி இரட்சிப்பின் பாதையில் நடத்துவோம்.

தேவன் அவர்களை இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். எரேமியாவின் மூலமாய் தேவன் திருவுளம் பற்றிய காரியத்தை நினைவு கூறுவோம் எரேமியா 18:46 "குயவன் வனைந்து கொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான். அப்பொழுது கர்த்தருடைய வசனம் எனக்கு உண்டாகி, அவர்: இஸ்ரவேல் குடும்பத்தாரே, இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக்குச்செய்யக்கூடாதோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; இதோ இஸ்ரவேல் வீட்டாரே, களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்." இதை படித்திக்கொண்டிருக்கும் நீங்களும் இடறுவது உண்டானால், உங்களை இன்று தேவனிடம் வேறே பாண்டமாய் வனையும்படி முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். அவர் உங்களை மறுபடியும் தம்மிடம் சேர்த்துக்கொள்ள வல்லவராய் இருக்கிறார்.

## ஜெபம்:

**அன்பின் பரலோக பிதாவே, எங்களை வேறே பாண்டமாய் வனைய ஒப்புக்கொடுக்கிறோம். எங்களை உடைத்து உருவாக்கி பயன்படுத்தும். இயேசுவின் மூலம் கெஞ்சிக்கேட்கிறோம் எங்கள் நல்ல பிதாவே. ஆமேன்.**

**வாக்குத்தத்த வசனங்கள்: சங்கீதம் 103:10-13**

"அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்."

- Manoj Kumar

உலக இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!...



# Robert J. Thomas

## வேதத்தின் மீதுள்ள அளவுக்கடந்த அன்பின் காரணமாக தன் ஜீவனை இழந்த ஒரு வாலிபனின் சரித்திரம்!

1839-ம் ஆண்டு **Wales** தேசத்தில் பிறந்த **Robert J. Thomas** சிறுவயதிலிருந்தே சுவிசேஷ வாஞ்சையும், ஆத்துமாக்களைக் குறித்த பாரமும் நிறைந்த வாலிபன். அதே பாரமுள்ள Carolin என்ற பெண்மணியை திருமணம் செய்த சில நாட்களிலேயே சுவிசேஷத்திற்காக ஐந்து மாத பயணமாக சீனாவிற்கு விரைந்தார். ஆனால், சில நாட்களுக்குள் அவருடைய மனைவி மரித்ததால் செய்வதறியாது கலங்கினார்.


அந்த நாட்களில் கொரியா, உலகின் பிற பகுதிகளின் உறவை துண்டித்ததால், **The Hermit Kingdom** என்று அழைக்கப்பட்டது. வெளி நாட்டவர் அவர்கள் பகுதிக்கு வருவதையோ, பிற மதங்களை குறித்து சொல்வதையோ மறுத்தனர். மீறி வந்தால் அவர்களை கொலை செய்துவிடுவார்களாம். 1863-ல் கொரிய அதிகாரிகள் இயேசுவை ஏற்றுக்கொண்ட 8000 பேரை கொலையும் செய்துள்ளனர். 1865 ம் ஆண்டு **Robert,** இரண்டு வர்த்தகர்கள் மூலமாக கொரியாவின் சுவிசேஷ அவசியத்தை அறிந்துக்கொண்டு மாறுவேடமிட்டு அங்கு சென்றார். நான்கு மாதங்கள் அங்கேயே தங்கி சுவிசேஷத்தை பிரசங்கித்தும், அவர்கள் மொழியில் வேதாகமத்தை மொழி பெயர்த்தும் கொடுத்தார். இயேசுவை ஏற்றுக்கொண்டால் மரணம் நிச்சயம் என்று நன்கு தெரிந்தும் பலர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். மீண்டும் அடுத்த வருடம் 1866-ல் அநேக பரிசுத்த வேதாகமத்தோடு வர்த்தக கப்பலில் கொரியா தேசத்திற்கு சென்றார். இந்த முறை கப்பலை அங்குள்ள கொரிய போர்வீரர்கள் முற்றுகையிட்டனர். அவர்களை வெளியேறுமாறு எச்சரித்து, கப்பலுக்கு நேராக நெருப்பு வைத்து அனுப்ப தொடங்கினர். அங்கிருந்து கரைக்கு தப்பி செல்ல நினைத்த அநேகரை கொலையும் செய்தனர். கப்பல் எரிந்து கொண்டிருக்க, **Robert** தன்னிடம் உள்ள வேதாகமத்தை கரையில் இருக்கும் கொரிய மக்களிடம் தூக்கி அவர்களிடம் வீசிக்கொண்டே இயேசுவை குறித்து சொல்ல ஆரம்பித்தார். அவருடைய ஆடையில் தீப்பற்றியதால் தன்னிடம் உள்ள கடைசி வேதாகமத்தை எடுத்துக்கொண்டு கப்பலிலிருந்து குதித்து கரை ஏறினார். அவரை தடுத்த போர்வீரரிடம், "என் உயிரையும் கூட விடுவதற்கு ஆயத்தமாயிருக்கிறேன், தயவு செய்து இந்த பரிசுத்த வேதாகமத்தை வாங்கி கொள்ளுங்கள் என்று கண்ணீருடன் கெஞ்சினார்". ஆனால், அந்த வீரனின் கையிலிருந்த வாள் **Robert-** ன் தலையை துண்டாக்கியது. அவர் மரிக்கும் போது **Robert J. Thomas**-ன் வயது 27. அவரின் மரணம் அநேகருடைய இருதயத்தை அசைத்தது. பொக்கிஷமாகிய கர்த்தருடைய வார்த்தையை ஜனங்கள் தேட ஆரம்பித்தனர். அவர் மரித்த பின் கொரிய தேசத்தில் எழுப்புதலின் தீ பற்றி எரிய ஆரம்பித்தது. சில வருடங்களுக்கு பிறகு ஆயிரக்கணக்கான ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பை ருசித்தனர். உலகிலேயே மிகப் பெரிய சபைகளை கொண்ட இடமாக சரித்திரம் படைத்தது. இன்று உலகமே திரும்பிப் பார்க்கும் அளவிற்கு மிஷினரிகளை அனுப்புவதில் உலகளவில் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளது கொரியா.

**இயேசு கிறிஸ்துவுக்காக எதையும் இழக்க ஆயத்தமாயிருக்கிற ஒரே ஒரு வாலிபனைக் கொண்டு, கர்த்தரால் முழு தேசத்தையும் அசைக்க முடியும் என்பதில் துளியும் சந்தேகமில்லை!!!**

**அந்த ஒரு வாலிபனாக மாற நாம் ஆயத்தமா?**

\- **Priya**

# அன்பு தம்பி தங்கச்சி!




### எல்லாரும் சந்தோஷமா இருக்கீங்களா?

நம்ம எல்லாருக்குமே அடிமையாக வாழ்கிறது பிடிக்காது தான? சில நேரம் பறவைகளைப் பார்க்கும்போது நமக்கும் சுதந்திரமாக பறக்கனும் என்று ஆசை வருகிறது. இப்படி தான் Nancy அக்காக்கும் ஆசை வந்துச்சு! எப்போ தெரியுமா? அழகான Colourful Butterflies பார்க்கும் போது அதை போல அழகா இருக்கனும், பறக்கனும் என்று ஆசைப்பட்டாங்க. இவ்ளோ அழகா Colourful ஆ பறக்குற Butterflies தன்னோட Adult Stage-ஐ reach பண்ண எவ்ளோ Struggles Face பண்ணும் தெரியுமா? But it will never give up at any cost. தான் அடையனும் என்று நினைத்த காரியத்தை அடைந்த பின்பு தான் மரணத்தை ருசிப் பார்க்கும். **"A report says, most adult butterflies live only one or two weeks"** தம்பி, தங்கச்சி! கொஞ்சநாள் தான் வாழப் போகிறோம் என்று தெரிந்தும் இந்த Butterflies எதையும் இழக்கவில்லை, தன்னோட destiny-ஐ reach பண்ணுகிறது. நீயும் நானும் இந்த வண்ணத்துப் பூச்சிகளைப் பார்க்கிலும் விசேஷித்தவர்கள், பாடுகள் நிறைந்த பாதை தான், Survive பண்ண முடியல தான் But don't give up, இழந்துவிடாதே! We have a great destiny to reach and live in. It is eternal & everlasting. சோர்ந்து போய் இருக்கறாயா? எழுந்திரு, don't Quit!! இயேசு கிறிஸ்து உனக்காக வைத்திருக்கும் பந்தயப் பொருளைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாய் ஒடு... இழந்துவிடாதே!! இக்காலத்துப் பாடுகளின் நிமித்தம் சோர்ந்து போய் நித்திய ஜீவனை இழந்துவிடாதே!

**'Don't lose hope, God has a plan, Trust what you're going through is, shaping you into who you need to become' (A beautiful, colourful Butterfly)**

**- Blessy**



# Never let go



Never let go your first love for Christ, remember he loved you first.

Never let go your anointing, it is the strength of a warrior.

Never let go your calling because he who called you is faithful.

Never let go your zeal for Christ.

Never let go your faith because no one can please him without faith.

Never cease reading your Bible because blessed are those who read, hear and do as per the Word of God.

Never let go your prayer time, it is the time of getting charged. The more you are charged, the more you can be used.

**- Jenefar**



# எழுப்புதல் நட்சத்திரம்

## - டேவிட் லிவிங்ஸ்டன்

ஜனங்கள் விரும்புவதெல்லாம் வலியில்லாத கிறிஸ்தவம். இருண்ட கண்டமாகிய ஆப்பிரிக்கா தேசத்துக்கு கர்த்தர் தன் மூலமாய் ஒளி கொடுக்க சித்தமுள்ளவராயிருக்கிறார் என்பதை அறிந்தார் **டேவிட் லிவிங்ஸ்டன்**. பல உபத்திரவங்களின் மத்தியிலும் அங்கு சென்று பின்வாங்காமல் கர்த்தருக்காக ஊழியப் பணியை செவ்வென செய்து முடித்தார். ஸ்காட்லாந்திலே க்ளாஸ்கோவுக்கு 9 மைல் தூரத்தில் டேவிட் லிவிங்ஸ்டனுக்கு ஒரு பெரிய ஞாபகார்த்த மண்டபம் உள்ளது. அங்கே அவர் ஆப்பிரிக்காவில் தங்கியிருந்து வருஷக்கணக்காக ஊழியம் செய்து வந்த அவரது வீட்டின் மாதிரி ஒன்று இருக்கிறது.

இந்தியாவில் கூரை வேய்ந்த சிறு குடிசையின் மாதிரி போல குடிசை... அதில் ஒரு சிறிய கட்டில்... இரண்டு மூங்கில் கம்புகளுக்கு நடுவில் இலைகளை வைத்து தைத்த ஒரு படுக்கை. பக்கத்தில் ஒரு மெழுகுவர்த்தி ஒன்று வைக்கப்பட்டு இருக்கிறது. அதன் அருகில் லிவிங்ஸ்டன் அவர்கள் முழங்காலில் நின்று ஜெபிக்கிற ஒரு மாதிரியை செய்து வைத்திருக்கின்றனர்.

ஆப்பிரிக்காவில் அடிமை வியாபாரம் கொடிகட்டிப் பறந்த அந்த நாட்களில் போர்ச்சுக்கீசியருக்கு எதிருக்கு எதிர் சமமாக எதிர்த்து நின்றார். அடிமை வியாபாரத்தை வேரோடு அழிக்கும் வரை போராடினார்.

இன்னும் ஊழிய பாதையில் அவர் சந்தித்த உபத்திரவங்கள் தான் எத்தனை? அந்தக் காட்டில் சிங்கங்களின் தொல்லை அதிகமாக இருந்தது. ஒரு சிங்கம் அவரைத் தாக்கி அவர் தோள்பட்டையைக் கிழித்து விட்டது. அதனால் அவர் கரமே ஊனமுற்றது.

இன்னும் ஆபத்துக்களைக் கடந்து பல வனாந்திரங்கள், பல காடுகளுக்குள் சென்று மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கிறார். நுழைய முடியாத காட்டுப் பகுதியில் செல்லும்போது அவர் உடைகள் கிழிந்து, புண்கள், காயங்கள் ஏற்பட்டன. ஆனால் துவளவில்லை... தொடரோட்டம் தொடர்ந்துக் கொண்டே இருந்தது. இறுதியாக அவர் மனைவியும், அவர் பிள்ளைகளும் விஷக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மரிக்கின்றனர். எந்த துக்க வெள்ளமும் அவர் மீது வைத்த நேச அக்கினியை அவித்துப் போட முடியவில்லை. இன்னும் ஜெபித்தார். அந்த துக்கம் அவரை அதிகமாய் அனல் கொள்ளச் செய்தது. இரவெல்லாம் அவருடைய ஜெபத்தின் கதறல் அந்த ஆப்பிரிக்காவின் காடுகளில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

**"அன்பான கடவுளே, இந்த மண்ணில் என் முழங்கால்கள் வளைந்திருக்கும் ஒரு வலிமைமிக்க கிறிஸ்தவ தேசத்தை மற்ற நாடுகளுக்கு வெளிச்சமாக வையும். எழுப்புதலைத் தாரும். இந்த உலகத்தின் பாவத்தின் இரணத்தை குணமாக்கமாட்டிரோ..."** என்று அழுகுரல்... பாரம் நிறைந்த இறுதி ஜெபம்... முழங்காலிலேயே உயிர் பிரிந்தது. அவருடைய இருதயம் ஆப்பிரிக்கா மண்ணில் புதைக்கப்பட்டது. அந்த இருண்ட கண்டத்திலும் வெளிச்சம் உதித்தது. அந்த மக்கள் நடுவில் எழுப்புதல் தீ பற்றிப் பிடித்தது.

ஒரு தனிமனிதனின் ஜெபம் அவருக்கு அருளப்பட்ட கசப்பான பாத்திரத்தில் பானம் பண்ணினார். பின்வாங்கவில்லை. ஆப்பிரிக்காவில் எழுப்புதல் வந்தது.

**தேவனுக்காக நாம் அதிகமாய் உபயோகப்பட வேண்டுமானால்,**
**தேவனோடு நாம் அதிகமாய் இருந்தாக வேண்டும்!**

- Daisy Solomon

## ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

உலகெங்கும் உள்ள திருச்சபைகளில் இயேசு கிறிஸ்துவின் சிலுவை பாடுகளை தியானிக்கிற இந்த கிருபையின் நாட்களில் கர்த்தர் நம்மையும் அநேக திருச்சபைகளில் பயன்படுத்தி வருகிறார். கடந்த மார்ச் மாதம் 04ஆம் தேதி மேலவூரணியில் தெரு பிரசங்கத்திலும், 11 மற்றும் 12ஆம் தேதிகளில் மேல இலந்தைக்குளம் திருச்சபையில் உயிர் மீட்சி கூட்டங்களிலும், 19ஆம் தேதி துரைச்சாமிபுரத்தில் தெரு பிரசங்கத்திலும், ஓய்வு நாள் ஆராதனையிலும் கர்த்தர் நம்மை பயன்படுத்தினார். மார்ச் மாதம் 12 ஆம் தேதி வேப்பங்குளம் திருச்சபையின் சிறப்பு உபவாச கூடுகையில் கர்த்தர் நம்மை அழைத்துக் கொண்டு போய் தமது இராஜ்யத்திற்கென்று அந்த திருச்சபையை ஆயத்தப்படுத்த கிருபை பாராட்டினார்.

கர்த்தருடைய அநாதி தீர்மானத்தின்படி கடந்த மார்ச் மாதம் 19ஆம் தேதி பாளையங்கோட்டையில், இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஐக்கியக் கூடுகையில் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்துகொள்ள கர்த்தர் கிருபை பாராட்டினார். மேலும் சென்னை பட்டணத்தை மையமாக வைத்து, மாதாந்திர வாலிபர் கூடுகையை மீண்டும் துவங்க கிருபை பாராட்டினார். அநேக வாலிபர்கள் உற்சாகமாய் பங்கு பெற்றதை பார்க்க முடிந்தது. ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமைகளில் இந்த கூடுகையை தொடர்ந்து நடத்த திட்டமிட்டுள்ளோம். தொடர்ந்து தேவ இராஜ்யத்திற்க்கென்று தொய்வில்லாமல் ஓடிட உங்கள் ஜெபங்களில் எங்களையும், நமது ஊழியங்களையும் நினைத்துக் கொள்ளுங்கள்.


மேல இலந்தைகுளம்




துரைசாமிபுரம்


மேலவூரணி



Synergia - Jesus Redeems




மாதாந்திர வாலிபர் கூடுகை, சென்னை







ஜெபங்களில் எங்களை தாங்குகிற உங்களையும் உங்கள் குடும்பங்களையும் கர்த்தர் தாமே மென்மேலும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

# BIBLE IN SCIENCE

Acquired Immuno Deficiency Syndrome (AIDS) பயங்கரமான நோய் ஏன் தெரியுமா? இந்த நோயை குணப்படுத்த இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படல. இந்த AIDS HIV( Human Immuno Deficiency Virus) மூலமாய் பரவுது. இந்த HIV Virus நம்ம உடம்புக்குள் நுழைந்த உடனேயே நம்ம உடம்புல இருக்கிற Macrophages-ஐ Attack பண்ணும். இந்த Macrophages தான் நம்ம உடம்புல இருக்குற unwanted dead cells, foreign bodie-ஐ digest பண்ண Help பண்ணுது. இந்த Virus Macrophages உடைய Mechanism-ஐ Affect பண்ணி நிறைய Virus-ஐ Produce பண்ண வைக்கும். இந்த Viruses இப்போ நம்ம Immune System-ல உள்ள முக்கியமான T-helper Cells-ஐ Attack பண்ணி உடலை பலவீனப்படுத்துகிறது. இந்த T-helper Cells-தான் Immune System-ஐ Activate பண்ணும் இதனால நம்ம Body Immunity-ஐ இழந்துவிடுகிறது. நிறைய நோய்கள் தொற்ற காரணமாய் இருக்கு. இதனால்தான் AIDS உள்ளவர்கள் சீக்கிரமாய் மரித்துப் போறாங்க. இதே மாதிரி தான் பாவம் என்கிற Virus-ஐ நம்ம வாழ்க்கையிலும் உள்ளே வர Allow பண்ணும்போது. ஆவிக்குரிய மனிதனுடைய பரிசுத்தம் என்கிற Immunity-ஐ இழந்துவிடுகிறோம். இதனால தோல்வி, பயம், இருள், வெறுமை போன்ற காரியங்கள் நம்மை சூழ்ந்துகொள்கிறது. Antivirus ஆகிய இயேசப்பாவின் இரத்தம் உங்களைக் கழுவ இன்றே ஒப்புக்கொடுங்க. **"சேனையே உன் பரிசுத்தத்தை இழந்துவிடாதே"**




- Thrusha




**Meeting ID: 766 799 5892**

**Passcode: 1CRORE**

புதிய நாளில் புதிய கிருபைகளை பெற்றிட,
புதிய நாளைத் தந்த கர்த்தரின் பாதத்தில்
அந்நாளை துவங்கிட, நித்தியத்தில் நம்மை
நிலை நிறுத்தும் நித்திய வார்த்தைகளை கேட்டிட
அதிகாலையில் எங்களோடு
இணைந்து கொள்ளுங்கள்...

இயேசுவை அறிந்தவர்களாய்,
தொழுதுகொள்கிறவர்களாய் மாத்திரம் அல்ல,
அவருக்காய் வாழ்ந்திட
அவரைப்போல வாழ்ந்திட,
இயேசுவைப்போல நாமும் உருவாக்கப்பட
மாலையில் எங்களோடு
இணைந்து கொள்ளுங்கள்...





Reg.No. 4/46/2019
Regd.Office :428,7th Middle Street, Thiagarajanagar, Tirunelveli - 627011
Phone: +91 766 799 5892, +91 900 322 4541 Email : info@endtimewarriors.org Web: www.endtimewarriors.in


Follow us on: